DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 152-2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 14**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சமீர் ராஜா | தகப்பனார் பெயர் கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 04.06.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்சமயம் சென்னை அயனாவரத்தில் உள்ள ESI மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 06.08.2019ந் தேதி நாகப்பட்டினம் மாவட்டம் அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது மதியம் 3.45 மணியளவில் நாகூர் காவல் நிலைய குற்ற எண் 279/2019 சட்டப்பிரிவு 302 இ.த.ச. வின் கீழ் வழக்கில் இறந்துபோன கார்த்தி, வயது 33/2019, த/பெ. கிட்டப்பா, கன்னியம்மன் கோவில் தெரு, அகரகொந்தை, திட்டச்சேரி என்பவரின் பிரேதத்தை நாகூர் காவல் நிலைய தலைமை காவலர் 1026 திரு. சேதுராஜன் என்பவர் அடையாளம் காட்ட பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடித்தத்தை பெற்று மேற்படி பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்டேன். பிரேத பரிசோதனை செய்து உடற்கூறுகளை சேகாரம் செய்து பகுப்பாய்விற்கு அனுப்பி வைத்தேன். உடற்கூறுகளை பகுப்பாய்வு செய்து அளித்த பகுப்பாய்வு சான்றை பெற்று மேற்படி கார்த்தி தண்ணீரில் மூழ்கி மூச்சு திணறி

இறந்திருக்கலாம் என்று சான்று வழங்கினேன். நாகூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க விபரம் கூறினேன். நான் பிரேத பரிசோதனையை 06.08.2019ந் தேதி பிற்பகல் 3.45 மணிக்கு ஆரம்பித்து 4.45 மணிக்கு முடித்தேன். நான் சடல கூறாய்வு ஆரம்பிக்கும்போது உடலில் அனைத்து பகுதிகளிலும் பிண விரைப்பு தன்மை காணப்பட்டது.

வெளிக்காயங்கள்

1) இடது கால் முட்டியில் சிராய்ப்பு காயம் 3x5 cm.

2) வலது கையில் 1x0.5cm

கண்கள் மூடியிருந்தன. காதில் எந்த நீரும் வடியவில்லை. மூக்கில் சிகப்பு நுரை தன்மை இருந்தது. வாய் பாதி திறந்திருந்தது அதில் சிகப்பு நுரை இருந்தது.

உட்புற காயங்கள்

1) நெஞ்சு மற்றும் கழுத்தை பார்த்தபோது எலும்பு முறிவு இல்லை. நெஞ்சு எலும்பில் முறிவு எதுவும் இல்லை. நுரையீரல் கவரில் இன்டேக்ட் ஆக இருந்தது. இதயத்தில் கவரிலும் இன்டேக்ட் ஆக இருந்தது. நுரையீரல் வீக்கமாக காணப்பட்டது. நுரையீரலில் கட் செய்த பிறகு அதில் இரத்தக்கசிவு காணப்பட்டது. வலது நுரையீரல் 450 கிராம், இடது நுரையீரல் 400 கிராம். இதயம் கட் செய்த பிறகு இரத்தக்கசிவு இருந்தது. அதன் எடை 300 கிராம். மூச்சுக்குழாய் மத்திய பகுதியில் அழுக்கு காணப்பட்டது. ஹயாய்டு எலும்பு இன்டேக்ட் ஆக இருந்தது.

2) வயிற்று பகுதியை திறந்து பார்த்தபோது பெரிடோனியம் சரியாக இருந்தது. கல்லீரலில் எந்தவித காயமும் இல்லை. அதன் எடை 1500 கிராம். அதை கட் செய்தபோது இரத்தக்கசிவு காணப்பட்டது. வயிற்று பகுதியில் 50ml கருப்பு மற்றும் பிரௌவுன் கலரில் காணப்பட்டது. குடல் காலியாக இருந்தது. பிளாடரில் எந்த காயமும் இல்லை.

3) மண்டை ஓட்டை உடைத்து பார்த்ததில் வெளிப்புறத்தில் எந்த காயமும் இல்லை. இடது பக்க பெரிட்டல் பகுதியில் 4x7cm அளவிலான இரத்தக்கட்டி இருந்தது. மூளையின் அடுக்கு நன்றாக இருந்தது. அதன் எடை 1200 கிராம். அதை கட் செய்த போது இரத்தக்கசிவும் இல்லை, இரத்தக்கட்டியும் இல்லை. பரவலான இரத்தக்கசிவு காணப்பட்டது. மண்டையோட்டில் எலும்பு முறிவுகள் காணப்படவில்லை.

**சடல கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விசரா அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. Diatoms Report அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இடது கால் மூட்டி மற்றும் வலது கையில் காணப்பட்ட காயங்கள் தடுமாறி கீழே விழும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது. மூளையின் இரத்தக்கசிவு மற்றும் கல்லீரலின் இரத்தக்கசிவு எதனால் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. ஒரு நபரின் உடலில் சாதாரணமாக 300 மி.கி அளவு ஆல்கஹால் இருந்தால் அவரால் சாதாரணமாக செயல்பட முடியாது என்றால் சரிதான். விசிரா ஆய்வு அறிக்கையில் வயிற்றில் 150மி.கி, சிறுகுடலில் 78மி.கி, கல்லீரலில் 92மி.கி, சிறுநீரகத்தில் 127மி.கி ஆக மொத்தம் 447மி.கி ஆல்கஹால் உள்ளது என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் இந்த அளவிற்கு ஆல்கஹால் அருந்தியிருப்பதால் அவர் தண்ணீரில் நிலை தடுமாறி விழுந்து மீளமுடியாமல் மூழ்கி மூச்சு திணறி இறக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

( சாட்சியம் காணொலி மூலம் பதிவு செய்யப்பட்டது.)